தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி:ombudsmanlocal@tn.gov.in
Website:www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.136/மா/2025
நாள் 17.10.2025

R. மயில்சாமி
மதுரை ...... முறையீட்டு மனுதாரர்

உத வி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு)
மதுரை மாநகராட்சி,
மதுரை ....... எதிர் மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவரின் 10.08.2024 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 12.08.2024 அன்று பெறப்பட்டு 136/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவர் தனது 10.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 20, விளாங்குடி பாலமுருகன் கோவில் 2வது தெருவில் புதியதாக கட்டப்பட்டு இயங்கி வரும், புஷ்பகனி அரங்கம் (A/C மஹால்) திருமண மண்டபம், வீட்டுமனைக்கு மாநகராட்சியில் கட்டிடம் அனுமதி பெற்றுக் கொண்டு திருமண மண்டபமாக கட்டிடம் சுமார் 5000 சதுரடிக்கு மேலாக சட்டத்திற்கு புறம்பாக திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது. புஷ்பகனி அரங்கம் (A/C மஹால்) திருமண மண்டபத்திற்கு நான்கு புறங்களிலும் இடைவெளி இடம் (Set back spaces) விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking Spaces) இடம்விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் விசேஷ காலங்களில் வரும் நான்கு சக்கர வாகனங்கள், மூன்று, இரண்டு சக்கர வாகனங்களை தெருக்களில் நிறுத்துவதினால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்களும் ஏற்படுகிறது. இதனால், பள்ளி பேருந்துகள், குடிநீர் வாகனம், ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வர முடியவில்லை, மேலும், முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் பள்ளி மாணவ, மாணவியர்கள் நடந்து இவ்வழியாக செல்ல

முடியாமல் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள். மேலும் மேற்படி திருமண மண்டபத்திற்கு வருவாய் துறையினரிடம் கட்டிட உரிமச் சான்று தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965–ன்படி உரிமம் பெறவில்லை, புஷ்பகனி A/C மஹால் திருமண மண்டபம், பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட அலுவலகத்திலும் ஒப்புதல் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக இயங்கி வருகிறது. இது குறித்து புகார் மனுவை, மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மண்டலம் 2 (வடக்கு) அவர்களிடம் 06.07.2024 தேதியில் பதிவு அஞ்சலில் புகார் மனுவை அனுப்பி இருந்தும் இன்று வரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக அரசாணை எண் 99 ப.நி.சீ.துறை நாள் 21.09.2015–ன்படி 30 தினங்களில் நடவடிக்கை எடுக்க தவறிய உதவி ஆணையாளர், உதவி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் உதவிப்பொறியாளர்கள் மற்றும் கட்டிடத்தை கண்காணிக்க தவறிய கள ஆய்வாளர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி புஷ்பனி அரங்கம் (A/C மஹால்) திருமண மண்டபம், அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டிடத்திற்கு நான்கு பக்கங்களிலும் இடைவெளி விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் விடாமலும் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட திருமண மண்டபத்தை தமிழ்நாடு அரசாணை எண் 7 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 21724/2016/BA2 நாள் 03/01/2017 உத்தரவின்படியும் மற்றும் அரசாணை (நிலை) எண் 195 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 5.11.2022 அரசாணையின்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–பிரிவு 56, 57–ன்படி மேற்படி திருமண மண்டபத்தை Stop Work Notice/Notice calling for approval plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் (Lock and Seal) and demolition notice வழங்கி விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) 3140 of 2019 நாள் 12.12.2024 மற்றும் 27490 of 2023 நாள் 20.11.2023 உத்தரவின்படி புஷ்பகனி திருமண மண்டபம் உரிமையாளர் அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 30.05.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் ம2ஈ1/002104/2023–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

> "மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 20–ல் உள்ள பாலமுருகன் கோவில் 2வது தெருவில் கட்டப்பட்டுள்ள புஷ்பகனி திருமண மஹால் கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டியுள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி திரு.ஆர் மயில்சாமி, என்பவர் தொடர்ந்த வழக்கு எண் W.P.(MD) 29924/2024 மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை அமர்வின் 11.12.2024 நாளிட்ட தீர்ப்பாணையில் சம்பந்தப்பட்ட வழக்கின் மனுதாரர் மற்றும் 6வது பிரதிவாதி ஆகியோருக்கு வாய்ப்பளித்து சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி வழக்கின் மனுதாரர் திரு. ஆர் மயில்சாமி, மற்றும் 6வது பிரதிவாதி திரு.சு.சிவக்குமார் ஆகிய இருவரையும் 11.04.2025 அன்று உதவி ஆணையாளர், மண்டலம் 2 (வடக்கு) அலுவலகத்தில் நேரில் ஆஜராகி உரிய ஆவணங்களுடன் தங்களது தரப்பு விளக்கத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

திரு.ஆர்.மயில்சாமி, என்பவரது எழுத்துப்பூர்வ விளக்கத்தில், புஷ்பகனி திருமண மண்டப குடியிருப்பு மனைக்கு, மாநகராட்சியில் அனுமதி பெற்றுக்கொண்டு வர்த்தக கட்டிடமாக கட்டியுள்ளதாகவும், கட்டிட வரைபட அனுமதிக்கு மாறுதலாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டப்பட்டுள்ளதால் கட்டிடத்தினை மூடி முத்திரையிட்டும் தொடர்ந்து கட்டிடத்தை அகற்றுமாறும் தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கின் 6வது பிரதிவாதி திரு.சு.சிவக்குமார் என்பவர் 11.04.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகி உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க 7 தினங்கள் கால அவகாசம் கோரினார். மீண்டும் 22.04.2025ம் தேதிய விளக்கத்தில், கடந்த 24.08.2018ம் தேதி குடியிருப்பு கட்டிடத்திற்கு மாநகராட்சியில் அனுமதி பெற்றுள்ளதாகவும், வீடு கட்ட ஆரம்பித்த பொழுது கொரோனா தொற்று நோய் ஆரம்பத்தினால் எந்தவித கட்டுமான பணி ஆரம்பிக்க முடியவில்லை என்றும், மீண்டும் கட்டுமான பணியை 2022–2023 வருடத்தில் தொடங்கும் போது வணிக கட்டிடத்திற்கு திருத்திய கட்டிட வரைபட அனுமதி (Revised plan) வழங்கக் கோரிய மனு மாநகராட்சியில் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

02.05.2025 நாளிட்ட இவ்வலுவலக கடித எண் ம2ஈ1/002104/2023–ல் வழக்கின் 6வது பிரதிவாதி திரு.சு.சிவக்குமார் என்பவர் தெரிவித்த விளக்கத்தில் மாநகராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கும் திருத்திய கட்டிட வரைபட அனுமதி ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், கீழ்க்கண்ட காரணங்களுக்காக அன்னாரின் விளக்கம் நிராகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

1) 6வது பிரதிவாதி விளக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிட அனுமதி கோரி திருத்திய வரைபடங்கள் எதுவும் இவ்வலுவலகத்தில் நிலுவையில் இல்லை.
2) குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி பெற்று, வணிக பயன்பாட்டு கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது.
3) தற்போது கட்டப்பட்டுள்ள புஷ்பக்கனி மஹால் கட்டிடம் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–க்கு முரணாக உள்ளது.

மேற்கண்ட காரணங்களை தெரிவித்து நகர் ஊரமைப்பு சட்டத்தின் கீழ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நீதி மன்றத் தீர்ப்பின்படி புஷ்பக்கனி திருமண மஹால் கட்டிடத்தின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை விவரங்களை திரு.ஆர்.மயில்சாமி என்பவருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சென்னை உயர் நீதி மன்றம் மதுரை அமர்வில் திரு.சு.சிவக்குமார் என்பவர் W.P.(MD)No.14287/2025 நாள் 18.05.2025ல் மீண்டும் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

எனவே, மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை அமர்வில் நிலுவையில் உள்ள வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்." எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் மேற்கண்ட மனு மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 20, விளாங்குடி பாலமுருகன் கோவில் 2வது தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள புஷ்பக்கனி அரங்கம் (A/C மஹால்) திருமண மண்டபம், வீட்டுமனைக்கு மாநகராட்சியில் கட்டிடம் அனுமதி பெற்றுக்கொண்டு சுமார் 5000 சதுரடிக்கு மேலாக சட்டத்திற்கு புறம்பாக திருமண மண்டபமாக கட்டப்பட்டுள்ளது என்பதும். இதனால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்பதும், மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கு நான்கு புறமும் இடைவெளி விடாமலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், எனவே, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள புஷ்பகனி திருமண மஉறால் கட்டிடத்தின் உரிமையாளர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறும், கோரியிருப்பது மனுதாரரின் மனுவின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள புஷ்பகனி திருமண மஹால் கட்டிடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், கட்டிட உரிமையாளரால் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை அமர்வில் W.P.(MD) No.14287/2025 நாள் 18.05.2025ல் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

5. இந்நிலையில், மேற்கண்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள புஷ்பகனி திருமண மஹால் கட்டிடத்தின் உரிமையாளர் மீது மனுதாரர் திரு. R. மயில்சாமி அவர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) No.29924 of 2024-ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு, 11.12.2024 நாளிட்ட தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது:–

XXX XXX

6. In the light of the above observations, there shall be a direction to the respondents 1 to 5 herein to consider the petitioner's representation dated 06.07.2024, on its own merits and pass appropriate orders in accordance with law, after giving due opportunity to the petitioner herein and the sixth respondent herein, as well as all other persons, who may be interested in the subject property, within a period of three (3) months from the date of receipt of a copy of this order. It is made clear that this Court has not expressed any of its views with regard to the merits of the matter and that it is open to the concerned respondents to consider the same on its own merits.

XXX XXX"

மேலும், மனுதாரரின் புகார் தொடர்பாக புஷ்பக்கனி அரங்கம் (A/C மஹால்) திருமண மண்டபத்தின் உரிமையாளரால் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு

W.P.(MD) No.14287/2025-ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு 19.08.2025 நாளிட்ட தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது:–

"xxx xxx

6. Recording the above submission, this Writ Petition is disposed of with the following directions:-

(i) The petitioner is directed to submit the application for revision of the planning approval through online mode within a period of two weeks from the date of receipt of a copy of this order. Upon such submission, the second respondent (the Assistant Director, District Town and Country Planning Office, Madurai) shall consider the application on merits and pass appropriate orders, in accordance with law, within a further period of four weeks thereafter.

(ii) In the event the petitioner faces any difficulty in uploading the application online, the second respondent is directed to render necessary assistance to facilitate the submission.

No costs. Consequently, connected Miscellaneous Petition is closed."

எனவே, மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு), வார்டு எண் 20, விளாங்குடி, பாலமுருகன் கோவில் 2வது தெருவில் கட்டப்பட்டுள்ள புஷ்பகனி அரங்கம் (A/C மஹால்) திருமண மண்டபத்தின் உரிமையாளர் திரு. சு. சிவக்குமார் என்பவர் இந்நேர்வு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு எண் 14287/2025–ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு 19.08.2025 அன்று தீர்ப்பு அளித்துள்ள நிலையில், அத்தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை–625 018.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.